[2002 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி மருத்துவமனை என்பது ஒரு வட்டார மருத்துவமனை. தற்போது பிரேத பரிசோதனை செய்யப்படவேண்டும் என்று சொன்னால், அங்கிருந்து உடல்கள் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் எடுத்துச்செல்லப்படுகின்றன. எனவே, இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருவாய்த் துறையின்மூலம் இப்போது 5 சென்ட் நிலம் மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பிரேத பரிசோதனைக் கூடம் அமைப்பதற்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டு, தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. எனவே, அவினாசி மருத்துவமனை வளாகத்திலே உடனடியாகப் பிரேத பரிசோதனைக் கூடம் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 237, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

237—

குடிநீர் வழங்கல்

***1042—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகப் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள குடிநீர்த் தொட்டிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி முறையாகக் குடிதண்ணீர் வழங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகத்திலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியால் நேரடியாகக் குடிநீர் வழங்கப் படுவதில்லை. இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்நிலை நீர்த்

2002 ஏப்ரல் 26]

தேக்கத் தொட்டிகளில் இருந்து, குடிநீர், மோட்டார்மூலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிமூலம் தண்ணீர் ஏற்றுகின்ற பொறுப்பு வீட்டுவசதி வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.கே. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஸ்கோர்ஸ் பகுதி என்பது கோவை மாநகராட்சியினுடைய 26-வது வார்டில் உள்ளது. அங்குள்ள* D.F.O. Compound-*லே அரசு அலுவலர்கள் நிறையப் பேர் வாழ்ந்து வருகிறார்கள். இது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம். அங்கே வாக்குச் சேகரிக்கச் சென்றபோது, மூன்றாவது மாடியிலிருந்து கருவுற்ற பெண்கள் கீழே வந்து எங்களால் தண்ணீர் எடுத்துச் செல்ல முடியவில்லை என்று தங்களுடைய துன்பத்தை, துயரத்தை என்னிடத்திலே சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தப் பகுதியிலே மேல் மாடியிலே சின்டெக்ஸ்* tanks *பொருத்தப்பட்டிருக்கின்றன. நான் இப்போது தங்கள் மூலமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அந்த மாடியிலே பொருத்தப்பட்டிருக்கிற சின்டெக்ஸ்* tanks-*க்கு மாநகராட்சி நேரடியாகக் குடிநீர் வழங்காவிட்டாலும்கூட, அந்த* tanks-*க்குச் செல்ல வேண்டிய தண்ணீரைக் கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு முறையாக வழங்கினால், அதன்மூலமாக அங்கிருந்து அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும். எனவே, என்னுடைய கோரிக்கையெல்லாம் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தேவையான அளவிற்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதுதான். இதனைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற, குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 70 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒருவேளை அந்த அளவு குறைவாக இருக்குமானால் அதை உயர்த்திக் கொடுப்பதற்கு மாநகராட்சிமூலம் மேல்*

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின்கீழ் கோவை மாநகர அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பகுதிகளுக்கும் இதர பகுதிகளுக்கும் லாரிகளின் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு லாரிகளுக்கு வாடகையாக மட்டும் 88 இலட்சம் ரூபாய் கோவை மாநகராட்சி செலவு செய்கிறது. இதற்குப் பதிலாக பொதுக் குழாய்களைப் பகிர்மானம் செய்து அமைத்து விட்டோம் என்று சொன்னால் தண்ணீர் நிரந்தரமாக ஜனங்களுக்குக் கிடைக்கும். இந்த வாடகைப் பணம் மாநகராட்சிக்கு, அரசுக்குச் செலவாகாது. இரண்டாவது, ஏற்கெனவே நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டது போல, 100 பேர் வாழ்கின்ற பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தின் அடிப்படையில், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பகுதிகளுக்கும் பொதுக் குழாய்களை நிர்மாணித்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 238, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

238—

விளம்பரப் பலகைகள்

***3680—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் சாலையோரங்களில் அனுமதி பெற்று வைத்துள்ள பெரிய விளம்பரப் பலகைகள் எத்தனை?